இலங்கை ராணுவத்துக்கு பாகிஸ்தானில் பயிற்சி

Registered as a Newspaper in Sri Lanka
விலை ரூபா ஒன்று

ஈழமுரசு

முரசு 2 29-7-1985 திங்கட்கிழமை (ஆடி 14 ஜுல்கஃதா 10) முழக்கம் 173

470 பேர் விசேஷமாகத் தெரிவு

(புதுடில்லி)

இலங்கைப் பாதுகாப்புப் படையைச் சேர்ந்த உயர் அதிகாரிகளுக்கும், இராணுவ வீரர்களுக்கும் அடுத்த மாதத்தில் பாகிஸ்தானில் ராணுவப் பயிற்சி அளிக்கப்படவிருப்பதாக புதுடில்லி வட்டாரங்கள் தெரிவித்தன. முதற்கட்டத்தில் முப்பது அதிகாரிகளுக்கு அடுத்த வாரத்தில் பயிற்சி ஆரம்பமாகும் இந்தப் பயிற்சி நான்கு வாரங்களுக்கு நடைபெறும். அதேவேளையில் இருநூறு சாதாரண ராணுவ வீரர்களுக்கான பயிற்சி எட்டுவாரத்துக்கு நடைபெறும். இதனையடுத்து மேலும் இருநூற்று நாற்பது இலங்கை ராணுவத்தினருக்கு நவீன போர்ப் பயிற்சி அளிக்கப்படவுள்ளது. அறுபது பேர் கொண்ட தனித்தனிக் குழுவாகப் பயிற்சி அளிக்கப்படும். இப்பயிற்சி ஆறு மாத காலத்துக்கு இடம்பெறும்.

வடக்கும் கிழக்கும் இணையாத ஒரு அமைப்பை

தமிழர் ஏற்கும் நிலையில் இல்லை!

மாகாணசபை யோசனை அர்த்தமற்றது; நாடு திரும்பிய கணேசலிங்கம் தகவல்

வடக்கையும் கிழக்கையும் இணைத்து வழங்கப்படும் ஒரு அமைப்பின் மூலமே இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணப்படும் என்ற நிலையிலிருந்து கூட்டணி மற்றும் தமிழ் குழுக்களின் தலைவர்களை மாற்றம் காணச் செய்வது சாத்தியமற்றது என்று தமிழகத்திலிருந்து நேற்று நாடு திரும்பிய கூட்டணிப் பிரமுகரும் முன்னாள் பட்டிருப்பு எம்.பியுமான திரு. பூ. கணேசலிங்கம் 'ஈழமுரசு'க்குத் தெரிவித்தார்.

தமிழகத்துக்கு அடுத்த வாரம் செல்லும் இலங்கை முஸ்லிம் அரசியல் வாதிகள் குழு என்ன காரணங்களை எடுத்துக் கூறினாலும், வடக்கையும் கிழக்கையும் இணைத்து உருவாக்கப்படும் ஒரு அமைப்புகளுக்கு குறைவான எந்தவொரு தீர்வையும் சென்னையிலுள்ள தமிழர் குழுக்களின் தலைவர்கள் ஏற்றுக் கொள்ள மாட்டார்கள் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

பூட்டான் மாநாடு இனப்பிரச்சினைக்குத் தீர்வைக்காணுமென்ற நம்பிக்கை பொதுவாக தமிழகமெங்கும் இருக்கின்றபோதிலும், அவ்வாறான திடமான நம்பிக்கையை தமிழர் குழுக்களின் தலைவர்கள் இன்னும் ஏற்படுத்தவில்லையென்றும், இலங்கை அரசின் போக்கே இதற்குக் காரண

...6ஆம் பக்கம் பார்க்க

இனப்பிரச்சினை தீர்ப்பதற்கு சமஷ்டி ஆட்சி!

(சென்னை)

இலங்கைத் தமிழர் பிரச்சினைக்கு சமஷ்டி ஆட்சி அமைப்

—6ஆம் பக்கம் பார்க்க

உகண்டாவில்

பாராளுமன்றம் கலைப்பு; அரசியல் சட்டமும் ரத்து!

(கம்பாலா)

உகண்டாவில் ஆட்சியிலிருந்து கவிழ்க்கப்பட்ட மில்டன் ஒபோட்டே தன்சேனிய நாட்டில் அரசியல் அடைக்கலம் கோரியிருக்கலாம் என்று உகண்டாவிலிருந்து வெளியாகிய சில தகவல்கள் தெரிவித்துள்ளன.

இதே வேளையில் உகண்டாவில் தற்போது ஆட்சியைக் கைப்பற்றியுள்ள இராணுவ அதிகாரிகள் நாட்டின் அரசியல் அமைப்பை ரத்துச்செய்து பாராளுமன்றத்தையும் கலைத்துள்ளனர்.

புதிய ஆட்சித் தலைவர் பிரிகேடியர் ஒகெல்லோ நாட்டு மக்களுக்கு விடுத்துள்ள செய்தியில் மக்கள் அமைதியாக இருந்து ஆட்சியாளர்களின் எதிர்கால நடவடிக்கைகளை அவதானிக்க வேண்டுமெனக் கேட்டுள்ளார்.

இராணுவத்தினர் பொது மக்களுக்கெதிரான வன்செயல்களில் ஈடுபடமாட்டார்கள்

...6ஆம் பக்கம் பார்க்க

எம். ஜி. ஆர். டோக்கியோவில்; இன்று வைத்திய பரிசோதனை!

(டோக்கியோ)

தமிழக முதலமைச்சர் திரு. எம். ஜீ. இராமச்சந்திரன் டோக்கியோவில் இன்று டாக்டர் கானுவினால் மருத்துவ சிகிச்சைக்கு உட்படுத்தப்படவுள்ளார்.

இன்று முதல் ஒரு வார காலத்திற்கு இடம்பெறவுள்ள மருத்துவசோதனையின்பின்னர் முதலமைச்சர் தொடர்ந்து சிகிச்சைக்கு உட்படுத்தப்பட வேண்டுமா என்பது பற்றித் தீர்மானிக்கப்படும்.

கடந்த அக்டோபரில் முதல்வரைப் பரிசோதனை செய்த ஜப்பானிய நரம்பியல் மருத்துவ நிபுணரான டாக்டர் கானுவே இம்முறையும் முதல்வரைப் பரிசோதனை செய்யவுள்ளார்.

தமது பத்துநாள் ஜப்பான் விஜயத்தின்போது தமிழக அரசுக்கான கப்பலொன்றையும் முதல்வர் கொள்முதல் செய்வார்.

பொதுவான இணக்கமொன்றைக் காண்பதற்கு

5 குழுக்கள் பிரதிநிதிகளுடன் கூட்டணி இவ்வாரம் பேசும்!

(திருச்சி)

பூட்டான் மாநாட்டின் இரண்டாம் சுற்றுப் பேச்சின் போது தமிழ் மக்கள் சார்பில் பொதுவான ஒரு அறிக்கையை முன்வைத்தற்கு ஐந்து தமிழீழ அமைப்புக்களின் பிரதிநிதிகளுடனும் கூட்டணித் தலைவர்கள் இவ்வாரம் பேச்சுவார்த்தை நடத்தவிருப்பதாக கூட்டணிச் செயலதிபர் திரு. அ. அமிர்தலிங்கம் நேற்றுத் தெரிவித்தார்.

திருச்சியில் நிருபர்கள் மத்தியில் பேசிய அவர், பஞ்சாப் பிரச்சினையில் பாரதப் பிரதமர் நேர்மையுடனும், ராஜதந்திரத்துடனும் நடவடிக்கை எடுத்தது போல இலங்கை அரசாங்கத்தின் தலைவரும் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றும், அதன் மூலமே பிரச்சினைக்குத் தீர்வு காண முடியுமென்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

இனப்பிரச்சினைக்கு அரசியல்

—6 ஆம் பக்கம் பார்க்க

பாரதம் புறப்படு முன்னர்

எச்.டபிள்யூவுடனும் டிக்ஸிற் தனிமையில் சந்தித்து பேச்சு

இந்திய அரசாங்கத்தின் அழைப்பையேற்று நேற்று பாரதம் புறப்படுவதற்கு முன்னர் தூதுவர் டிக்ஸித், பூட்டான் பேச்சுவார்த்தைக் குழுவின் தலைவரான கலாநிதி எச். டபிள்யூ ஜெயவர்த்தனவையும் சந்தித்துப் பேசினார்.

ஆகஸ்ட் 12ம் திகதி பேச்சுவார்த்தையின் போது இலங்கைக் குழு சமர்ப்பிக்கவிருக்கும் ஆலோசனைகள்பற்றி இருவரும் சுமார் நாற்பது நிமிடங்கள் தனிமையில் பேசியதாக தெரியவந்துள்ளது.

தூதுவர் டிக்ஸிற் அடுத்த மாதம் 7ம் திகதி முக்கிய செய்தியுடன் கொழும்பு திரும்புவாரெனவும் தெரியவந்துள்ளது.

தூதுவர் டிக்ஸிற்றிடம் ஜனாதிபதி தெரிவிப்பு:

பூட்டான் மகாநாடு இரண்டாம் கட்டப் பேச்சின் யோசனைகள் தீவிரமாக ஆராய்வு!

(கொழும்பு)

அடுத்தமாதம் 12ம் திகதி பூட்டானில் ஆரம்பமாகவுள்ள இரண்டாம் கட்டப் பேச்சுவார்த்தையின் போது சமர்ப்பிக்கப்படவுள்ள புதிய யோசனைகள் பற்றி முடிவு செய்ய தீவிரமான ஆலோசனைகள் நடைபெற்று வருவதாக ஜனாதிபதி ஜெயவர்த்தன தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கான இந்தியத் தூதுவர் திரு. ஜே. என். டிக்ஸித் நேற்று புதுடில்லி புறப்படு முன்னர் ஜனாதிபதியைச் சந்தித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். இனப்பிரச்சினைக்கு நடைமுறைத் தீர்வுகாண்பதில் தமக்குள்ள உறுதியையும் ஜனாதிபதி ஜெயவர்த்தன இச்சந்திப்பின் போது தெரிவித்தார்.

திரு. டிக்ஸித், பூட்டான் பேச்சுவார்த்தையில் இலங்கைக் குழுவுக்கு தலைமை தாங்கிச் செல்லும் திரு. எச். டபிள்யூ. ஜெயவர்த்தனவையும் நேற்று சந்தித்துப் பேசினார்.

எச்சரித்தும் பயனில்லை!

(கிளிநொச்சி)

கடந்த 25, 26ம் திகதிகளில் கிளிநொச்சிப் பகுதி முழுவதும் ஹர்த்தால் வெற்றிகரமாக

...6ஆம் பக்கம் பார்க்க

தமிழ்நாடு செல்லும் முஸ்லிம் குழுவுக்கு இதுவரை ஐந்து பேர் தெரிவு

இம்மாதம் மூன்றும் திகதி தமிழ்நாடு செல்லும் இலங்கை முஸ்லிம் அரசியல்வாதிகள் குழுவுக்கு இதுவரை ஐந்து உறுப்பினர்கள் தெரிவாகியுள்ளனர்.

முன்னாள் கல்வி அமைச்சர் டாக்டர் அல்ஹாஜ் பதியுதீன் மஹ்மூத் இக் குழுவுக்குத் தலைமை தாங்குகின்றார்.

முன்னாள் செனட்டரும் ஐக்கிய தேசியக் கட்சிப் பிரமுகருமான அல்ஹாஜ் மசூர் மௌலானா, அமைச்சர் பாகீர் மாக்கரின் அந்தரங்கச் செயலாளரான அல்ஹாஜ் ஏ. எச். எம். அஷ்ரப், சர்வதேச இஸ்லாமிய இயக்கத் தலைவரான அல்ஹாஜ் ஏ. டபிள்யூ. எம். அமீர், அல்ஹாஜ் எம். சுஹைர் ஆகியோர் இக்குழுவில் செல்வதற்குத் தெரிவாகியுள்ளனர்.

கிழக்கிலங்கையைப் பிரதிநிதித்துவப்படுத்த மேலும் ஒருவர் தெரிவாகலாமெனத் தெரிகின்றது.

வரி விளம்பரம்

விற்பனைக்கு

அத்தியடி பிள்ளையார் குறுக்கு வீதியில் 2½ பரப்பில் 5 அறைகள் குளியலறை கிணறுடன் சகல வசதிகளுடன் கூடிய வீடு விற்பனைக்குண்டு. தொடர்பு 104/1, அத்தியடி, யாழ்ப்பாணம்.

விவாகம்

எமது ஸ்தாபனத்தில் அநேக மண மக்கள் உண்டு. விரைவில் விவாகம் நிறைவேற்றுவோம் மாவைவிநாயகர் மங்கள ஏஜன்சி கொல்லங்கலட்டி தெல்லிப்பளை.

தவறிவிட்டது

இல; 528403115X கதிரவேலு மலர்மகள் என்பவருடைய தேசிய அடையாள அட்டை தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் ''சாகோ'' மரக்காலை இல: 104, சட்டநாதர் றோட், நல்லூரிலுள்ள எமது இல்லத்துக்கு அனுப்பி வைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். தொலைபேசி இல ; 22873.

மாணவர், பக்தர் கஷ்டத்தை நீக்க

கள்ளுத்தவறணையை இடம் மாற்றுமாறு வேண்டுகோள்

(சாவகச்சேரி)

மட்டுவில் பகுதியிலுள்ள மகிளடித் தவறணையால், பாடசாலை மாணவ, மாணவியர், அடுத்தாற்போலுள்ள ஆலயங்கள், ஆலய பக்தர்கள், பிரயாணிகள், அயல் வீடுகளில் வசிப்போர் அனைவரும் பாதிக்கப்படுவதால் இத்தவறணையை வேறு இடத்திற்கு உடனடியாக மாற்றப்பட வேண்டுமென கேட்கப்பட்டுள்ளது.

இப்பகுதிப் பொது மக்கள் மட்டுவில் தெற்கு இணக்க சபையில் இவ்வாறு முறைப்பட்டுள்ளனர். அவர்கள் மேலும் தமது புகாரில் குறிப்பிட்டுள்ளதாவது:-

இத்தவறணை சாவகச்சேரி தெ. ப. பெ. உ. வி. கூ. சங்கத்திற்குச் சொந்தமானது. இது மட்டுவில் மகா வித்தியாலயத்திற்கு அருகாமையிலும், விளைவேலி மருதடி வீரசக்தி விநாயகர் தேவஸ்தானத்திற்கு அருகாமையிலும், மட்டுவில் பருத்தித்துறை பிரதான வீதியிலும் அமைந்துள்ளது. இதனால் ஆலய அடியார்களுக்கு பெரிய பாதிப்பு. அதைவிட பாடசாலை மாணவருக்குப் பாதிப்பு. மேலும் தினசரி பல மாட்டு வண்டிகள் வாசலில் விடப்படுவதினால் பிரயாணிகளுக்குப் பாதிப்பு என்றும் கூறப்பட்டுள்ளது.

இப்புகாரைத் தொடர்ந்து மட்டுவில் தெற்கு இணக்க சபை இதற்கான நடவடிக்கையை எடுக்கு முகமாக ஓர் விசேட குழுவை நியமித்துள்ளது. திரு பொ. திருநாவுக்கரசு, அதிபர் க. இளையதம்பி ஆகியோரைக் கொண்ட இக்குழு, தவறணை உயர்மட்ட அதிகாரிகளைச் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தியதைத் தொடர்ந்து, உயர்மட்ட அதிகாரிகள் மேலும் ஒன்றரை மாத அவகாசத்தில் தவறணையை இடமாற்றம் செய்வதாக உறுதியளித்துள்ளதாகவும் கூறப்படுகிறது.

பிறந்தநாள் வாழ்த்து

✳ நுணுவில் மேற்கு, தர்மேந்திரன் செல்வமணி தம்பதிகளின் மகள் கௌசி (தர்ஷிகா) இன்று தனது நான்காவது பிறந்த நாளைக் கொண்டாடுகிறார்.

✳ யாழ். பீ. எஸ். லேன், நிஜாம் பரீனா தம்பதிகளின் மகள் நிஸ்தா இன்று தனது இரண்டாவது பிறந்த நாளைக் கொண்டாடுகிறார்.

✳ குடத்தனை, மணற்காடு அருள்ராஜ் மேரிஜடா தம்பதிகளின் மகன் அருந்தவராஜ் இன்று தனது இரண்டாவது பிறந்த நாளைக் கொண்டாடுகிறார்.

✳ சாவகச்சேரி, தருமகுலசிங்கம் பரமேஸ்வரி தம்பதிகளின் மகள் அர்பணா இன்று தனது மூன்றாவது பிறந்த நாளைக் கொண்டாடுகிறார்.

✳ கைதடி கிழக்கு, பாக்கியராஜா சந்தானலக்சுமி தம்பதிகளின் மகள் தனுசுயா இன்று தனது முதலாவது பிறந்த நாளைக் கொண்டாடுகிறார்.

✳ கொழும்புத்துறை, சிவதாசன் யசோக்குமாரி தம்பதிகளின் மகன் பிரியகாந் தனது முதலாவது பிறந்த நாளை இன்று கொண்டாடுகிறார்.

✳ யாழ்ப்பாணம் மணிக்கூட்டு வீதி, விஜயபாஸ்கரன் பாலசரஸ்வதி தம்பதிகளின் மகன் தனுசன் இன்று தனது இரண்டாவது பிறந்த நாளைக் கொண்டாடுகிறார்.

✳ மிருசுவில் பழைய வாய்க்கால், ராஜன் அலெக்சாண்டர் யோகராணி தம்பதிகளின் மகள் அனிற்றா நிரோஷினி இன்று தனது ஆறாவது பிறந்த நாளைக் கொண்டாடுகிறார்.

✳ மட்டுவில் தெற்கு, குணசேகரம் புவனேஸ்வரி தம்பதிகளின் மகள் அகல்யா இன்று தனது ஏழாவது பிறந்த நாளைக் கொண்டாடுகிறார்.

✳ காரைநகர், தெய்வேந்திரன் ஞானசிகாமணி தம்பதிகளின் மகள் டினேஷ்குமாரி இன்று தனது முதலாவது பிறந்த நாளைக் கொண்டாடுகிறார்.

✳ வசாவிளான், உதயகுமாரன் சுசீலாதேவி தம்பதிகளின் மகன் துஷாந்தன் இன்று தனது இரண்டாவது பிறந்த நாளைக் கொண்டாடுகிறார்.

✳ சித்தன்கேணி, திருவம்பலம் லோகேஸ்வரி தம்பதிகளின் செல்வப் புதல்வன் ஸ்ரீரும் தனது மூன்றாவது பிறந்த தினத்தை இன்று கொண்டாடுகிறார்.

✳ ஆனைப்பந்தி பருத்தித்துறை வீதி, முத்துச்சாமி விஜயா தம்பதிகளின் மகள் சத்தியா இன்று ஐந்தாவது பிறந்த நாளைக் கொண்டாடுகிறார்.

சுழிபுரம் விக்ரோரியா அதிபர் பெருமிதம்

சர்வதேசத்திலும் தமிழினம் மகிமை பெற்று திகழ்வதற்கு கல்விச் சிறப்பே காரணம்

(சுழிபுரம்)

சுழிபுரம் விக்ரோரியாக் கல்லூரியின் உயர்தர மாணவர் ஒன்றியத்தின் இருபத்திரண்டாவது ஆண்டு விருந்துபசார விழா கல்லூரி பிரதான மண்டபத்தில் தலைவர் ஏ. எஸ். சிவானந்தன் தலைமையில் நடைபெற்றது.

பிரதம விருந்தினராகக் கல்வித் திணைக்கள நிர்வாக அதிகாரி திரு. கா. சந்திரராஜா கலந்து கொண்டார்.

திரு. ப. சண்முகராஜா தனது உரையில் ''பாடசாலையை விட்டு வெளியேறும் ஒவ்வொரு மாணவனினதும் பிற்கால வாழ்க்கை சிறந்த முறையில் அமைய ஒத்துழைக்க வேண்டியது சமுதாயத்தின் பொறுப்பு. அதற்காகவே அவர்களுக்குத் தொழில் நுட்பத் துறையில் வாய்ப்புகள் வழங்கப்படுகின்றன. இத் தொழில் நுட்பத்துறையில் பயின்ற சுயமாகவே தொழில் செய்யக் கூடிய நிலையை அவர்கள் பெறவும், அதன் மூலம் வேலையில்லாத் திண்டாட்டத்தை ஒழிக்கவும் தற்போதைய கல்வித்திட்டம் இடமளிக்கிறது. இந்தியாவில் தொழில் நுட்பத் துறைக்கு அளிக்கப்பட்டுள்ள அதிக முக்கியத்துவமே அதை ஒரு சிறந்த கைத்தொழில் நாடாக விளங்கச் செய்துள்ளது'' என்றார்.

திரு. கா. சந்திரராஜா, பேசுகையில் ''வடபகுதியில் நிலையான ஓர் இடத்தை விக்ரோறியாக் கல்லூரி பெற்றுள்ளது. அதற்குக் காரணம் கல்வியிலும் விளையாட்டிலும், தொழில் நுட்பத் துறையிலும் அது பெற்றுள்ள திறமையே'' என்றார்.

கல்லூரி அதிபர் திரு. க. அருணாசலம் தமது உரையில் ''இன்று உலகில் பல்வேறு பகுதிகளிலும் தமிழினம் தலைநிமிர்ந்து நிற்கக் காரணம் அவர்கள் மாணவர்களாக இருந்த போது கடைப்பிடித்து வந்த ஒழுக்கமும், நேர்மையும் மட்டுமன்றி கல்வியில் காட்டிய சடுபாடுமே. இன்று விக்ரோறியாக் கல்லூரி கல்வியிலும் மற்றும் பலதுறைகளிலும் மேலோங்கி நிற்பது மாணவர்களினதும், பெற்றோர் ஆசிரியரதும் விடா முயற்சியினாலேதான். அத்துடன் எதிர்காலத்தில் சமுதாய வழிகாட்டிகளாகவும், சிறந்த தலைவர்களாகவும் பேச்சாற்றலில் வல்லவர்களாகவும் விளங்க இத்தகைய விருந்துபசாரங்கள் மாணவர்க்குப் பயிற்சி அளிக்கின்றன'' என்றார்.

காரைநகர் மணற்காடு முத்துமாரி அம்மன்

பௌர்ணமி விழா

காரைநகர் மணற்காடு கும்பநாயகி முத்துமாரி அம்மன் ஆலயத்தில் 31-7-85 புதன்கிழமை பௌர்ணமி விழா சிறப்பாக நடைபெறவுள்ளது. காலை 8 மணிமுதல் 11 மணிவரை விசேட அபிஷேகமும் அதனைத் தொடர்ந்து அன்னதானமும் வழங்கப்படும்.

விசேட நிகழ்ச்சிகளாக

மாலை 2 மணிக்கு அளவையூர் S. S. சிதம்பரநாதன், காரையம்பதி N. K. கணேசன் கோஷ்டியினரின் நாதஸ்வரக் கச்சேரியும் - 3 மணிக்கு திருமதி. வசந்தா வைத்தியநாதன் அவர்களின் ''யாவுமாகி நின்றாள்'' என்னும் தலைப்பில் சமயச் சொற்பொழிவும், 4 மணிக்கு துர்க்கா துரந்தரி சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களின் ''பூரணியும் பூரணையும்'' சொற்பொழிவும் 5 மணிமுதல் 6.30 மணிவரை அம்பாள் வீதியுலாக் காட்சியும், 6.30 முதல் 8 மணிவரை பிரம்மஸ்ரீ ப. முத்துக்குமாரசாமி திரு. க. கணபதிப்பிள்ளை ஆகியோரின் பாட்டுக் கச்சேரியும் இடம்பெறும். பக்கவாத்தியங்களாக வயலின் V. R. ராதாகிருஷ்ணன், மிருதங்கம் S. மகேந்திரன், கஞ்சிரா M. சிதம்பரநாதன், தவில் K. வீராச்சாமி ஆகியோர் இடம்பெறுவர்.

சங்கீத சபையின் பரீட்சைப் பெறுபேறுகள்

(சித்தன்கேணி)

வட இலங்கைச் சங்கீத சபையினர் இவ்வாண்டு அகில இலங்கை ரீதியில் நடத்திய சங்கீத, வயலின், மிருதங்கப் பரீட்சைகளின் பெறுபேறுகள் அண்மையில் வெளியாகியுள்ளன.

யாழ்-கல்விப் பணிப்பாளர் திரு. எம். சிமியரம்பிள்ளையின் தலைமையில் இயங்கிவரும் வட இலங்கைச் சங்கீதசபையின் 1985ம் ஆண்டுக்கான சகல பாடங்களினதும் பரீட்சைப் பெறுபேறுகள் சகல பரீட்சார்த்திகளுக்கும் தனித்தனி தபால் மூலம் அவர்களது சொந்த முகவரிகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக சபையின் நிர்வாகச் செயலாளர் திரு. கே. பொன்னம்பலம் தெரிவித்துள்ளார்.

இப்பரீட்சைப் பெறுபேறுகள் கிடைக்கப் பெறாத பரீட்சார்த்திகள் யாழ். கல்வித் திணைக்களத்திலுள்ள சபைக் காரியாலயத்துடன் தொடர்பு கொள்ளுமாறும் அவர் கூறியுள்ளார்.

தையல்மெஷின் அன்பளிப்பு

(நல்லூர்)

கலைமகள் வட்டாரத்தில் காந்தி சனசமூக நிலையப் பகுதியைச் சேர்ந்த படித்து வேலை வாய்ப்பின்றியிருக்கும் பெண் பிள்ளைகள் தையல் வேலையில் பயிற்சி பெற ''யூனிசெப் நிதி உதவித் திட்டத்தின் கீழ்'' மூன்று தையல் மெசின்களை அன்பளிப்பாக காந்தி சனசமூக நிலையத்திற்கு வழங்க நடவடிக்கை எடுக்கும்படி கோரி யாழ். மாநகராட்சி மன்ற ஆணையாளர் திரு. சி. வி. கே. சிவஞானம் அவர்களுக்கு அரியாலை மேற்கு காந்தி சனசமூக நிலையச் செயலாளர் கடிதமொன்றை அனுப்பியுள்ளார்.

'மாணவர் சமுதாயம் மலர

ஆசிரிய பயிற்சியாளர் பங்காற்றுதல் வேண்டும்'

(இருபாலை)

கோப்பாய் ஆசிரிய கலாசாலையின் வருடாந்த விளையாட்டுப் போட்டி கலாசாலை அதிபர் செல்வி. க. சின்னப்பு தலைமையில் நடைபெற்றது.

இவ்விளையாட்டுப் போட்டியில் விளையாட்டுத்துறைத் தலைவர்கள் திரு. ஆர். இரட்ணசிங்கம் திருமதி. றெஜினா ஆகியோர் ஒலிம்பிக் தீபத்தை ஏற்றி வைத்து விளையாட்டுக்களை ஆரம்பித்து வைத்தனர்.

ஆசிரிய மாணவர்களின் அணிவகுப்பு மரியாதையை அதிபர் செல்வி. க. சின்னப்பு ஏற்றுக் கொண்டு அங்கு உரையாற்றுகையில், ''மாணவர்களின் விளையாட்டில் வெற்றி முக்கியமல்ல மாணவர்களின் பங்களிப்பே முக்கியத்துவம்'' என்ற ஒலிம்பிக் தத்துவத்தினை மாணவர்கள் மத்தியில் நினைவு கூர்ந்தார்.

அவர் தொடர்ந்தும் பேசுகையில், 'ஆசிரிய மாணவர்கள் சகல துறைகளிலும் முன்னேறி வருங்கால மாணவர் சமுதாயத்தை நல்ல முறையில் உருவாக்கி வளர்ப்பதற்காகவே கலாசாலையில் இவ்வாறான நிகழ்ச்சிகள் நடைபெறுகின்றன' என்று கூறினார்.

மேற்படிப் போட்டிகளில் ''சுவர்ணா'' இல்லம் முதலாவது இடத்தையும், ''இராதா'' இல்லம் இரண்டாவது இடத்தையும், ''அருணா'' இல்லம் மூன்றாவது இடத்தையும் பெற்றுக் கொண்டன.

போட்டியில் வெற்றியீட்டிய இல்லங்களுக்கு அதிபர், உப-அதிபர், விரிவுரையாளர்கள், பரிசில்களை வழங்கினர்.

இவ்விளையாட்டுக்களை திருமதி. டி. தர்மராஜா திரு. என். இரட்ணம் ஆகியோர் சிறப்புற ஏற்பாடு செய்திருந்தனர்.

''ஏகலைவன்'' அரங்கேற்றம்

(நல்லூர்)

காந்தி சனசமூக நிலைய கலைக் குழுவினால் ஆவணி மாதம் 3ம் திகதி சனிக்கிழமை நிலைய வெள்ளி விழா அரங்கில் ''ஏகலைவன்'' என்னும் நாட்டுக் கூத்து அரங்கேற்றப்படவிருக்கிறது.

நிலையத் தலைவர் திரு. எஸ். பொன்னுத்துரை தலைமையில் நடைபெறும் இந்த நாட்டுக் கூத்து அரங்கேற்றத்தில் நாட்டுக் கூத்து அண்ணாவியார் இசைமணி எஸ். மார்க்கண்டு பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப் படுவார்.

''ஏகலைவன்'' நாட்டுக்கூத்து நடிகர்கள் தங்களது அண்ணாவியாரிடம் பாரம்பரிய முறைப்படி நல்லாசி பெறுவார்கள்.

வெளிநாட்டு பயணங்கள்

வெளிநாட்டுப் பிரயாண ஒழுங்குகளுக்கும்,
கடவுச்சீட்டுத் தொடர்பான சகல ஏற்பாடுகளுக்கும்

மல்ரி சேவிசஸ்

37 (351) மணிக்கூட்டு வீதி,
(வெலிங்டன் தியேட்டர் சந்தி)
யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 22762

பட்டயகார அம்மனுக்கும் சனிதோஷ, படுபட்சியா?

புலவர் ஈழத்துச் சிவானந்தன் கேள்வி

‘‘பட்டயகார அம்மனுக்குப் படுபட்சியா? ஏழரை எட்டில் வியாழன் சனிதோஷம் என்று மனிதர்களுக்கு இருப்பது போல் நம்மைப் படைத்த பராசக்திக்கும் உண்டா? இது குறித்து மனிதர்களாகப் பிறந்தவர்கள் சிந்திக்க வேண்டாமா? நூற்றாண்டுப் பழமை மிக்க ஒரு கோவிலின் இடிபாடுகளும் சிதைவுகளும் நமது கண்ணில் படவில்லையா?’’

மேற்கண்டவாறு புங்குடுதீவு மேற்கு பட்டயகார அம்மன் ஆலயத்தில் நடந்த மணிக்கோபுர கும்பாபிஷேகத்தில் நல்லுரை நிகழ்த்திய புலவர் ஈழத்துச் சிவானந்தன் கூறினார். ஸ்ரீனிவாச நாகேந்திரக் குருக்கள் நிகழ்ச்சிக்குத் தலைமை தாங்கினார்.

கும்பாபிஷேகத்திற்குப் பின்பு திருப்பணிச் சபை அங்குரார்ப்பண நிகழ்ச்சிக்கு முன்னோட்டமாக புலவர் சிவானந்தனின் திருப்பணி தொடர்பான நல்லுரை வழங்கப்பட்டது. அப்போது அவர் தொடர்ந்து கூறியதாவது: சேகரிக்கும் பொருளை ஐந்தாக வகுத்து ஒரு பகுதியை தெய்வப்பணிக்குக் கொடுக்கச் சொல்கிறார் திருவள்ளுவர்: ‘‘தென்புலத்தார் தெய்வம் விருந்து ஒக்கல் தான் என்று ஐம்புலத்தாறு ஓம்பல் தலை’’ என்கிறார். நம்மில் சிலர் தென்புலத்தார்; தான் என்பதோடு நின்று விடுகிறோம். தெய்வம், விருந்து சுற்றம், என்பதனை விட்டு விடுகிறோம். இந்த நிலை மாற வேண்டும்.

திருக்கோவில்களில் ஆண்டானுக்கு இடமில்லை. அடியார்களுக்குத்தான் இடமுண்டு. ‘‘ஆயக்கடவேன் நானேதான் என்னதோ இங்கு அதிகாரம்’’ என்ற சிந்தனை திருப்பணிச்சபையினருக்கு வேண்டும். யாரை எங்கே எப்படி அணுகுவது என்பதில்தான் திருப்பணியின் வெற்றி தங்கியிருக்கிறது. நிதி மிகுந்தவரிடம் பொற்குவை கேட்பதுபோல் நிதி குறைந்தவரிடம் கேட்கக் கூடாது. அவரிடம் காசுகள் கேட்க வேண்டும். நிதி மிகுந்தவரிடமே பொறுப்பு முழுவதையும் விடக்கூடாது. நிதி குறைந்தவர்களும் அதுவமற்றோரும் அடியார்கள் குழுவாக அமைந்து பணிகள் செய்ய வேண்டும்.

இதனை இதனால் இவன் முடிக்கும் என்று ஆய்ந்து அதனை அவன் கண் விட்டு பயன் பெறவேண்டும். அதிகார ஆணவத் தன்மைகளை ஆண்டவன் சந்நிதானத்தில் அடுக்கித் தொடரும் திருப்பணிகள் வெற்றி பெறுவது சத்தியத்தில் சத்தியம் எனவும் அவர் தெரிவித்தார்.

அதிபர் கா. கனகசுந்தரமும் பேசினார். உரைநிறைவில் திருப்பணிச்சபை தெரிவு செய்யப்பட்டது.

கோப்பாய் அரசினர் வைத்தியசாலை

போதியளவு மருத்துவர், மருந்து, நீர் வசதி எதுவுமே இல்லாத நிலையில் இயங்குகின்றது

(இருபாலை)

கோப்பாய் தொகுதிக்குட்பட்ட பகுதி மக்களுக்கு ஒரே ஒரு வைத்திய சாலையாக இருக்கும் கோப்பாய் அரசினர் வைத்தியசாலைக்கு தினசரி மூன்னூறுக்கும் அதிகமான நோயாளர்கள் வருகை தருகின்றனர். ஆனாலும் முழு நோயாளிகளும் உரிய நேரத்தில் பார்வையிடப்படுவதில்லையெனக் குறை கூறப்படுகிறது.

இன்னும் பலர் சிகிச்சை மேற்கொள்ளாமலே திரும்பிச் செல்ல வேண்டிய சூழ்நிலையும் ஏற்படுகிறதாம்.

இங்கு உதவி வைத்திய அதிகாரியாக இருவர் கடமையாற்றுகின்ற போதிலும் ஒருவர் லீவில் சென்றுவிட்டபடியால் ஒரு பெண் உதவி வைத்திய அதிகாரி மட்டுமே இவர்களைப் பார்வையிட வேண்டிய நிலையில் உள்ளார்.

வாட்டில் அனுமதிக்கப்பட்டிருக்கும் நோயாளிகளைப் பார்வையிட்டு முடிந்து வெளி நோயாளர்களை அவர் பார்வையிடுவதற்கு பத்து மணிக்கு மேலாகிவிடுவதால் அவசர நோயாளிகள் பெரிதும் பாதிக்கப்படுகின்றனர்.

இங்கு மருந்துக் குளிகைகள் கூட இல்லாததன் காரணமாக நோயாளிகள் வெளிக்கடைகளில் மருந்துக் குளிகைகளை வாங்கும்படி பணிக்கப்படுகின்றனர்.

அவசரக் காயங்களுக்குக் கூட மருந்து கட்டுவதற்கு பஞ்சு, பன்டேஜ், பிலாஸ்டர் கூட இங்கு கிடைப்பதில்லை.

கடந்த மாதம் இவ்வைத்தியசாலையின் பொறுப்பதிகாரியாகக் கடமையேற்று வந்த திரு. எம். அன்பழகனும் வேறிடத்திற்கு மாற்றப்பட்டு விட்டதால் வைத்தியசாலைக்கு வைத்திய பொறுப்பதிகாரி இங்கு இல்லாதிருப்பது பெருங்குறையாகும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

வைத்தியசாலையில் ஏழு அற்ரண்டர்கள் கடமை புரிந்து வந்ததாகவும் அவர்களில் இரண்டு பேர் வெளிநாடு சென்றுவிட்டதால் வைத்தியசாலையின் அன்றாட வேலைகளைச் செய்வதில் பெரிதும் சிரமம் ஏற்பட்டுள்ளதாகவும் மேலும் தெரிவிக்கப்படுகிறது.

இங்கு நீர் விநியோக முறைகளும் சீரற்றுக் கிடக்கின்றன. இரண்டு மோட்டர்கள் இயங்கி வந்த இடத்தில் தற்பொழுது ஒரு மோட்டர் மட்டுமே இயங்குவதானால் போதியளவு நீரைப் பெறமுடியாமல் நோயாளிகள் பெரிதும் பாதிப்படைகின்றனர்.

இது சம்பந்தமாக மேலிடத்திற்கு அறிவித்தும் இதுவரை எந்தவிதமான விமோசனமும் கிடைக்கவில்லை எனக்கவலையுடன் தெரிவிக்கப்படுகிறது.

நயினாதீவில் உலக வங்கியின் உதவியுடன் உரக்களஞ்சியம்

(நயினாதீவு)

உலக வங்கியின் உதவியுடன் நயினாதீவில் உரக்களஞ்சியம் ஒன்று நிறுவப்படவுள்ளது

சுமார் எண்பதாயிரம் ரூபா செலவில் நிறுவப்படவுள்ள மேற்படி களஞ்சியத்துக்கான கட்டட வேலைகளுக்குரிய ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டு விட்டதாகவும் விரைவில் வேலைகள் ஆரம்பமாகும் எனவும் தெரிவிக்கப்பட்டது. இக்களஞ்சியம் நிறுவப்பட்டதும் தீவுப்பகுதி மக்களின் உரத் தட்டுப்பாடு நீங்கும் என நம்பப்படுகிறது.

திருடர் தர்பாரினால் மக்கள்

விடியும் வரை விழித்திருக்க வேண்டிய பரிதாப நிலை

(இருபாலை)

மின்சாரத்தை நிறுத்தி விட்டு இரவு நேரங்களில் நடமாடும் கொள்ளையர்களினால் இருபாலைப் பகுதி மக்கள் பெரும் அச்சமும் பீதியும் அடைந்துள்ளனர்.

இரவு நேரமானதும் ஒழுங்கைகளுக்கான மின்சாரத் தொடர்புகளை நிறுத்திவிட்டு வீடுகளில் புகுந்து ஆடு, மாடு ஆகியனவற்றை அவிழ்த்துச் செல்வதாகவும், உடுபிடவை சமையல் பாத்திரங்கள் சைக்கிள்கள் ஆகியனவற்றையும் இக்கொள்ளையர்கள் கொள்ளையடித்துச்செல்வதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

அண்மையில் இப்பகுதியில் இப்படியான கொள்ளைச் சம்பவத்தில் ஈடுபட்டு வந்ததாகக் கருதப்படும் இருவர் தீவிரவாத இளைஞர்களினால் விடுதலை செய்யப்பட்டு எச்சரிக்கை செய்யப்பட்ட பின்பும், தொடர்ந்தும் இவ்வாறான சம்பவங்கள் நடைபெறுவதால் பொதுமக்கள் இரவு நேரங்களில் விழிப்புடன் இருக்கவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

துன்பத்தை நீக்குவதற்கு இறைத்தொண்டு அவசியம்

(சாவகச்சேரி)

‘‘கலியுகம் என்றால் துன்பத்தையே தருகிற யுகம் என்பது பொருள். ஆகவே துன்பத்தை நீக்கி நாம் இன்பத்தைஅடைய ஒரே வழி அதுதான் இறைத்தொண்டு. அப்படியான இறைத் தொண்டுகளில் நாம் ஈடுபடும்போது எமது மத வழிகாட்டிகளான சமயகுரவர்கள், நாயன்மார்களின் போதனைகளை, அவர்களின் திருமுறைகளைப் பின்பற்றுவதோடு அவர்கள் திருநாமங்களையும் நினைந்துருகக் கடமைப்பட்டுள்ளோம்’’

இவ்வாறு, சரித்திரப்பிரசித்திபெற்ற மட்டுவில் கலுவத்து சிவன் ஆலயத்தில் நடைபெற்ற சுந்தரமூர்த்திநாயனார் குருபூசையில் சிறப்புரை வழங்கிய முருகபக்தர் திரு. அ. குமாரசாமி கூறினார்.

இக்குருபூசை விழாவில் ஈற்றில் ஏழைகட்கு அன்னதானமும் வழங்கப்பட்டது. திரு. குமாரசாமி தொடர்ந்து கூறியதாவது:-

இன்றைய நிலையிலே இன்பங்களைவிட துன்பங்களே மலிந்துள்ளன. நாம் எமது முன்னோடிகளான சமய குரவர்கள், நாயன்மார்கள் போன்றோரின் இறைதொண்டுகளை நினைந்து அவர்களின் அடிச்சுவட்டைப் பின்பற்றுவதைத் தொடர்ந்தே துன்பத்திலிருந்து நிரந்தர விடுதலையடைந்து நித்திய இன்பத்தை அடையமுடியும் என்றார்.

வாய்க்கால் புனரமைப்பு

(நயினாதீவு)

சிறிய நீர்ப்பாசனத் திட்டத்தின்கீழ் நயினாதீவில் உள்ள சுமார் 2000 அடி நீளமான விவசாயத்திற்குப் பயன்படும் வாய்க்கால்கள் புனரமைப்புச் செய்யப்படுகின்றன. மேற்படி புனரமைப்பு வேலைகளை சமநலசேவைத் திணைக்களம்மேற்கொண்டுள்ளது.

குருநகர் விழாவில் அறிவுரை

கடமை உணர்ந்து நடத்தல் மேன்மை வாழ்வினைத் தரும்

(குருநகர்)

‘‘வீழ்ச்சி எழுச்சிக்கு வழி! எமது வாழ்வின் முன்னேற்றம் கல்வியில்தான் தங்கியுள்ளது. காலத்துக்குக் காலம் கல்வித் திட்டத்தில் ஏற்படும் மாற்றத்திற்கு ஏற்ப எமது சமுதாயமும் சொந்த வாழ்க்கை முறையும் மாற்றமுற வேண்டும்.’’

குருநகர் சென். ஜேம்ஸ் மகாவித்தியாலய பாடசாலைத் தினவிழாவில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு உரையாற்றிய யாழ். பிரதம கல்வி அதிகாரி ஆர். சுந்தரலிங்கம் மேற்கண்டவாறுதெரிவித்தார்

திருப்பலி ஒப்புக் கொடுப்பதுடன் விழா ஆரம்பமானது. திருப்பலியை ஒப்புக்கொடுத்த அருட்திரு. போல் நட்சத்திரம் அடிகளார் பேசுகையில் ‘‘மன்னனுக்கு தன் இடத்தில்தான் சிறப்பு; கல்வி மானுக்கோ சென்ற இடமெல்லாம் சிறப்பு. மாணவருக்கும், ஆசிரியருக்கும் புத்துயிர் அளிக்கக்கூடிய விதத்தில் கல்வியின் நோக்கத்தையும், ஆசிரியத்துவத்தின் கடமையையும் பேணி வருதல் வேண்டும்’’ என்றார்.

வரவேற்புரையை நிகழ்த்திய கல்லூரி அதிபர் திரு. அ. ஸ்ரனிஸ்லோஸ், ‘‘1983ம் ஆண்டிலிருந்து நாட்டின் நிலைபரம்தாக்கத்திற்குட்பட்ட பல்வகைச் சூழல் காரணமாக மிகவும் பின்தங்கிய நிலையில் எமது கல்வி வளர்ச்சி அமைந்தது. அதனைக்கட்டி எழுப்புவதற்கு நாமனைவரும் ஒன்றிணைந்து கூடிய கவனமெடுத்தல் வேண்டும். கல்விக்கூடமானது சூழலோடு இணைந்து செயற்பட வேண்டும். எமது கல்விக்கூடம் கடலோடு அண்மித்துள்ளதால்நீச்சல்போட்டி, படகோட்டப்போட்டி, மரதன் போட்டி ஆகிய பல்வகைப் போட்டிகளை மாணவரிடையே நடாத்தி கல்வி. விளையாட்டு, ஒழுக்கம், சமயம் ஆகிய துறைகளில் மாணவரை முன்னேற்ற முயன்றுள்ளோம். இவை கல்வியை முன்னெடுத்துச் செல்லும் என்பதில் எனக்கு நிறைய நம்பிக்கையுண்டு’’ என்றார்.

தொடர்ந்து மரதன், நீச்சல், படகோட்டல், தடைதாண்டல் போட்டிகளில் வெற்றியீட்டிய மாணவர்களுக்குப் பிரதம கல்வி அதிகாரி பரிசில்கள் வழங்கினார். வைபவத்தில் வட்டாரக் கல்வி அதிகாரி இ. சிவானந்தனும் கலந்து சிறப்பித்தார்.

கம்யூ. பிரமுகர் ‘வைத்தி’ வெளியிடும் நம்பிக்கை

இனப்பிரச்சினைக்கு தீர்வு கிடைப்பதன் மூலம் தொழிலாளர்களின் நலனும் பேணப்படும்

(சங்கானை)

சங்கானை பொது நூல்நிலைய மண்டபத்தில் அண்மையில் இலங்கை கம்யூனிஸ்ட் கட்சிப் பிரமுகர் திரு. அ. வைத்திலிங்கம் இலங்கைக் கூட்டுறவு ஊழியர் சங்க பொதுக் காரியதரிசி திரு. என். ரீ. இராசதுரையால் பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்பட்டார்.

அவரது பிறந்த தின விழாவில் நூலகர் திரு கணேஷ் பேசுகையில், ‘‘மேற்படி நூலகம் ஸ்தாபிப்பதற்கு பெரியார் திரு. அ. வைத்திலிங்கத்தின் பங்களிப்பு குறிப்பிடத்தக்கது’’ என்றார்.

திருவாளர்கள் பொ. கனகரத்தினம், கி, இராமச்சந்திரா, பொன். குமாரசாமி, மானிப்பாய் முன்னாள் எம். பி. திரு. வி. தர்மலிங்கம், அற்புதரத்தினம், என். சபாரத்தினம், விசுவநாதன், கா. ச. கந்தசாமி, சின்னத்தம்பி மற்றும் திருமதி சி. பத்மசுந்தரி ஆகியோர் பெரியாரின் சேவைகளை, சிந்தனைகளை, செயற்பாடுகளை எடுத்துக்கூறி உரையாற்றினர்.

அ. திரு. வைத்திலிங்கம் தனது பதிலுரையில், ‘‘நாட்டின் இனப்பிரச்சினைக்கு ஓர் நல்ல முடிவு மிக விரைவில் ஏற்படுவதன் மூலம் பொதுவாகப் பாதிக்கப்பட்டுவரும் தொழிலாளர்கள் நலன் பாதுகாக்கப்படும் என்றும், பொது எதிரியான முதலாளித்துவ சமூகத்தை, தமிழ், சிங்கள தொழிலாளர் வர்க்கத்தினர் அணிதிரண்டு எதிர்த்துப் போராடி நலன்களைப் பெற வேண்டும்’’ என்றும் கூறினார்.

இலங்கைப் பல்கலைக்கழக
வெளிநிலைப் பாடநெறிகள்
பாடநெறி சட்டம் (L.L.B)
தமிழ் மொழி மூலம்
விரிவுரைகள் 4.8.85 இல் ஆரம்பமாகின்றன
க. பொ. த. (உயர்தரம்) அல்லது வேறு
உயர் தகைமையுடையோர் விண்ணப்பிக்கலாம்,
பதிவாளர்
JAFFNA LAW ACADEMY
Power House Road, Jaffna,

விற்பனைக்கு
ரேடியோ, தொலைக்காட்சிப் பெட்டி, வீடியோ டெக், இவற்றின் சகல உதிரிப்பாகங்கள் மலிவான விலையில் பெற்றுக்கொள்ள இன்றே நாடுங்கள்.
சித்ரா ரெக்ஸ்ரைல்ஸ்
(ரெலிகோணர் கிளை)
159, மின்சார நிலைய வீதி,
நவீன சந்தை
யாழ்ப்பாணம்

உதய சிந்தனை

சிலர் இந்தப் பணத்திற்காக தங்கள் ஆத்மாக்களையே விற்றுவிடுகிறார்கள், மற்றவர்களுக்கு உதவுவதற்காகவே நீங்கள் பணத்தை வைத்திருக்க வேண்டும்,

— மாக்ஸிம் கார்க்கி.

37, கண்டி வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 23336

இதய ஒலி

29-7-1985 திங்கட்கிழமை (குரோதன ஆடி 14)

அநியாயச் சாவுகளை தடுப்பதற்கு முன்வாரீர்

சட்ட விரோத மின்பாவனை திகரிப்பால் அநியாயமான மரணங்கள் அதிகரித்து வருவதை அவ்வப்போது வெளியாகும் பத்திரிகைச் செய்திகள் அம்பலமாக்கி வருகின்றன.

சட்டவிரோதமாக மின்சார இணைப்பு, இலவசமாக மின்சாரத்தைப் பெற வழிவகுக்கின்றது என்ற ஒரே காரணத்தினால், அதனால் ஏற்படும் அபாயத்தை உணராது செயற்படுபவர்களே இந்தப் படுகொலைகளுக்குக் காரணகர்த்தாக்களாவர்,

"தமிழ்ப் பகுதிகளில் மட்டும்தான் சட்டவிரோத மின் இணைப்புப் பெறப்படுகின்றதா" என்று வாதத்துக்காகக் கேட்பவர்களும் இருப்பர்.

வாதத்துக்கும், விவாதத்துக்கும் விடப்படவேண்டிய ஒரு விடயமல்ல இது என்பதே எமது வாதமாகும்.

ஒரு சிலர் தமக்கு இலவசமாக மின் இணைப்பைப் பெறுவதற்காக நடத்தும் சட்ட விரோதமான அல்லது நியாயமற்ற நடவடிக்கைக்கு, அநியாயமாக மற்றவர்கள், அப்பாவித் தமிழர்கள் எதற்காகப் பலியாக வேண்டுமென்பதே நாம் எழுப்பும் கேள்வியாகும்.

இதனால் ஏற்படும் அபாயங்களை அரசாங்க அதிபர், மாநகர ஆணையாளரிலிருந்து, அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகஸ்தர்கள் மின்சார இலாகா அதிகாரிகள்வரை அனைவருமே அடிக்கடி எடுத்துக் கூறிய போதிலும், அனைத்தும் "செவிடன் காதில் ஊதிய சங்காகவே" போகின்றது.

சட்ட விரோத மின் இணைப்பினால் இரண்டு நஷ்டங்கள் ஏற்படுகின்றன.

உள்ளூராட்சி மன்றங்கள், மின்சார இலாகா ஆகியன தமது நியாயமான வருவாயை இழந்து வருகின்றன. இதனால் வரி செலுத்தும் குடி மக்களுக்குக்கூட சரியான முறையில் சேவையாற்ற முடியாத நிலை இம்மன்றங்களுக்கு ஏற்படுகின்றன,

அடுத்ததாக, அநியாய மரணங்கள் ஏற்பட இது ஏதுவாகின்றது.

தந்திக் கம்பிகளையும், பிளாஸ்டிக் 'கவர்' இல்லாத வெற்றுக் கம்பிகளையும் சட்டவிரோதமான மின்சாரம் பெறுவதற்குப் பயன்படுத்துவதாலேயே மரணங்கள் அடிக்கடி ஏற்படுகின்றன.

மின்வசதி இல்லாத வீதிகளிலும் ஒழுங்கைகளிலும் குறுக்கும் நெடுக்குமாக, இருட்டு வேளைகளில் இந்தக் கம்பிகளைப் பயன்படுத்தி மின் இணைப்புப் பெறுபவர்கள், அவ்வழியால் செல்ல நேரும் அப்பாவிகளுக்கு அந்த இடத்திலேயே மரணம் சம்பவிக்கும் என்பதை அறியாதிருப்பது வேதனையைத் தருகின்றது.

மரங்கள், வேலிகளால் கம்பிகளை இணைத்துப் பெறப்படும் மின்சாரத்தால், ஒரு சில ரூபாக்களைச் சேமிக்கலாம்.

ஆனால் மதிப்பிடற்கரிய மனித உயிரை மீளப் பெற முடியுமா?

மீசாலையில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த இருவர் அண்மையில் இவ்வாறான மின் இணைப்பால் ஸ்தலத்திலேயே மரணமாக நேர்ந்தது.

வேறொருவரைக் காப்பாற்றச் சென்ற போதே இவர்கள் மரணமாக நேர்ந்ததாக மரண விசாரணையில் தெரியவந்தது.

வண்ணார்பண்ணையில் பத்துவயதுப் பாலகன் ஒருவனும் இவ்வாறே மரணத்தைத் தழுவ நேர்ந்தது.

மின்சாரப் பகுதியினர் இங்கு சென்று சட்டவிரோத மின் இணைப்புகளை வெட்டித் தள்ளிய பின்னரும் கூட, பலர் மீண்டும் சட்டவிரோதமாக நடந்து வருவதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

வன்னிப் பகுதியில் வயோதிப விவசாயி ஒருவரும், கிளிநொச்சிப் பிரதேசத்தில் இளம் பெண் ஒருவரும் இவ்வாறு அநியாயமாகப் பலியெடுக்கப்பட்டுள்ளனர்,

மூன்று தினங்களுக்கு முன்னர் ஏழாலையில் குடும்பஸ்தர் ஒருவர் இவ்வாறு மரணமாக நேர்ந்தது. மற்றிருவர் மயிரிழையில் உயிர் தப்பினர்

இப்பொழுது மழைகாலமும் ஆரம்பித்திருப்பதால் மின் அபாயம் அதிகரிக்கும் என்பதை சொல்லித் தெரிய வைக்க வேண்டியதில்லை.

எனவே சட்டவிரோத மின் இணைப்புகளைச் சம்பந்தப்பட்டவர்கள் நிறுத்திக் கொள்வதே புத்திசாலித்தனமானது.

இதனால் ஏற்படும் பாதகங்கள் சிலருக்கு விளங்காதிருக்கலாம் எனவே இதனை விளக்கமாக எடுத்துக் கூறி மக்களைப் புரிய வைக்க வேண்டியது பொது அமைப்புக்கள், இயக்கங்களின் முக்கிய கடமையாகும்.

நற்பணிகளில் முன்னின்று உழைக்கும் நல்ல மனசு படைத்தவர்கள், அநியாயச் சாவுகளிலிருந்து அப்பாவி மக்களைத் தடுக்க தாமதமின்றி முன் வரவேண்டும் என்பதே எமது வேண்டுகோளாகும்.

இலங்கைக்கு வருவதற்கு அரசாங்கம் விஸா வழங்க மறுத்ததால் இளைஞர்களுடன் கடல் மார்க்கமாகச் செல்வதே ஒரே வழியாக தென்பட்டதாகக் கூறுகிறார் யாழ்ப்பாணம் வந்து சென்ற "த வீக்" சஞ்சிகையின் சிறப்பு நிருபர் பகவன் ஆர். சிங்

பனம் தோப்புக்கு ஊடாக வானில் பயணம் செய்தேன்

யாழ்ப்பாண யாத்திரை

6

நான்கு நாட்கள் நான் யாழ்ப்பாணக் குடாநாட்டிற் கழித்தேன்; தமிழீழ விடுதலைப் புலிகளின் ஓர் குழுவினர் என்னை விருந்தோம்பினர். பிணக்கும் போராட்டமும் மலிந்து, சிதைந்து சின்னாபின்னப்படும் இப்பிரதேசத்தின் நிலைமைகளைக் கண்கூடாகக் காணும் சந்தர்ப்பம் ஓர் இந்தியப் பத்திரிகையாளருக்கு வாய்த்தது இதுவே முதற் தடவையாகும். மீண்டும் மீண்டும் சமர்ப்பிக்கப்பட்ட விசா விண்ணப்பங்களைக் கொழும்பு நிராகரித்துவிட்டது; ஆகவே, எஞ்சியிருந்த ஒரேயொரு வழி, கடல்மார்க்கமே ஆயிற்று. அதுவே நெறியாகத் தெரிவு செய்யப்பட வேண்டி ஏற்பட்டமையால், போராளிகளின் விருந்தோம்பலும் பாதுகாப்பும் எனக்கு இணைபிரியாதன ஆகிவிடவே, அவற்றையும் ஏற்றுக் கொண்டேன்.

யாழ்ப்பாணக் குடாநாட்டின் கடலோரத் தரைமீது நாங்கள் காலடி எடுத்துவைத்தபோது வியாழக்கிழமை அதிகாலை இரண்டு மணிவரையில் இருக்கும். எம்மை ஏற்றிச் சென்ற வெள்ளை "வான்" வண்டி, இருள் கவிந்த பனம் தோப்புகளுக்கு ஊடாகவும், அச்சமயம் சன நடமாட்டம் அற்றிருந்த ஒடுங்கிய பாதைகள் வழியாகவும் சென்று, மூன்று மைல்களுக்கு அப்பால், ஒருவயதான பெண்ணும் அவரது வயதுவந்த பெண்பிள்ளைகள் மூவரும் இருந்த ஒரு வீட்டிற்குப் போயிற்று.

அதனையடுத்து, யாழ்ப்பாண நகருக்குச் சற்று அணித்தாகவுள்ள இன்னுமொரு சிறிய பட்டினத்திற்கு நாம் சென்றோம். அங்கே, "பொடியனின்" முக்கிய முகாமொன்றில், பணியிலும் பிரதானத்திலும் பல தரப்பட்ட போராளிகள் நாற்பது பேரளவில் காணப்பட்டனர். கப்டன்கள், லெப்ரினன்டுகள், கடேற்றுகள் என வேறுபட்ட முக்கியத்துவம் வாய்ந்த அநேகர் அங்கிருந்தனராயினும், ஒருவரோடு ஒருவர் தங்குதடையின்றித் தாராளமாகப் பழகிய விதத்தைக் கொண்டு, பதவி வரிசையில் அவர்களுக்கிடையே உள்ள வித்தியாசத்தை எவரும் அவதானித்திருக்க இயலாது. கணிப்பிற் பதவிவரிசைகள் இடம்பெறுவது, நாங்கள் ஒரு நடவடிக்கையில் ஈடுபடுத்த ஆட்களைத் தேர்ந்து எடுக்கும் தருணத்திலேயே ஆகும் எனச் சுபாஸ் விளக்கினார். 'மிகச் சிறந்த ஆற்றலுடைய "பொடியனே" "கொமாண்டோ" தாக்குதல்களுக்குத் தெரிவாவர். நானே தெரிந்தெடுத்த குழுவொன்றுதான் அண்மையில் ஒரு பொலிசு நிலையத்தை மிக வெற்றிகரமாகத் தாக்கிற்று' என்றாரவர் திருப்தி தொனிக்க.

அன்று மாலை, பிற சில குழுக்களையும் அவர்கள் கரந்துறையும் இடங்களையும் பார்வையிடும்பொருட்டு எம்மிற் சிலர் வெளிக்கிளம்பினோம். இந்தியாவின்கண் அமைந்த சென்னை மாநகரில் தமிழ் விடுதலைப் போராட்ட இயக்கத்தலைவர்கள் நட்பு ஒப்பந்தமொன்றை பிரகடனப்படுத்தியுள்ளனராயினும், யாழ்ப்பாணப் பகுதியிலுள்ள இவ்வியக்கங்களின் சாதாரண உறுப்பினர்கள், இனிமேல்தான் உடன்பாடுகளின் நெளிவு சுழிவுகளைப் பூரணமாக நுணுகிப் புரிந்து கொள்ளவேண்டி இருக்கிறது. பல்வேறு இயக்கங்களைச் சேர்ந்த இளைஞர்கள் மத்தியில் இன்னமும் சிறிது சந்தேகம் நிலவிவருகின்றது. இருந்தாலும், நாட்கள் செல்லச் செல்ல, யாழ். குடாநாட்டுப் பிராந்திய உள்ளூர் இயக்கக் கப்டன்களுக்கிடையில் மேலும் நல்லிணக்கமான நடவடிக்கைகள் நடந்தேறிக்கொண்டே போகப் போக, அத்தகை பிரச்சினைகள் தீர்ந்துபோயினவாகிவிடும். எவ்வாறாயினும், அதுவரைக்கும், சிங்கள இராணுவத்தையிட்டு இயக்கம் ஒவ்வொன்றும் எப்படிச் சதா சந்தேக விழிப்புநிலை பேணிவருகிறதோ, அதேயளவு, தற்காப்புநிலை கருதி சாவதானமாகவே பிற இயக்கங்களையிட்டும் இருப்பர். இவையெல்லாம் இவ்வாறு இருப்பினும், அவசர தேவையேற்படும் பட்சத்தில், இயக்கம் இயக்கத்திற்கு உதவியே வருகிறது என்றார் பொபி.

மறுநாளாகிய வெள்ளிக்கிழமையன்று இரண்டு "மிற்ஸுபிஷி டெலிக்கா வான்"களில் முகாமைவிட்டு நாம் புறப்பட்டோம். நான் சென்ற "வானில்" ஆயுதபாணிகளான ஐவர் வந்தனர். அவர்களிடம் இரண்டு ஏ.கே. நாலேழு றைபிள்'கள், இரண்டு சுழற்கைத் துப்பாக்கிகள், ஒரு "கிறெனேட்" எனப்படும் எறி கைக்குண்டு ஆகியன இருந்தன. எங்கள் வாகனத்திற்கு ஒரு நூறு யாரளவு முந்தி, வழிகாட்டியாகச் சென்ற வானில் முரட்டுத் தோற்றமுள்ள "பொடியன்" நால்வர் இருந்தனர். அவர்கள்வசம் 'செல்ஃவ்-லோடிங் றைபிள்ஸ்' அல்லது "எஸ். எல். ஆர்." எனப்படும் தானே குண்டேற்றும் றைபிள்கள் இரண்டு, ஒரு "ஏ.கே-நாலேழு றைஃபிள்," "சப்-மஷீன் கன்ஸ்" அல்லது "எஸ்.எம்.ஜீ," எனப்படும் சிறு இயந்திரத் துப்பாக்கி இரண்டு, எறி கைக்குண்டுகள் இரண்டு முதலாயின தயாராக இருந்தன.

வழி வழியே பல தினுசான சனங்களைச் சந்தித்தவண்ணம் நாங்கள் முதலில் சித்தன்கேணிக்கும், பின்பு மானிப்பாய்க்கும் சென்றோம். நான் அவர்களிடம் கேட்ட கேள்விகளுக்குச் சிலர் பதில் அளித்தனர்; பிற சிலர் என்னை ஓர் அபூர்வமான ஒருவரைப் பார்ப்பது போல நோக்கினர். இன்னும் சிலரோ என்னுடன் உரையாட அச்சப்படுவது வெளிப்படையாகத் தெரிந்தது. அந்த வேறுபாடான மனப்பான்மைகளை காரண-காரிய ரீதியாக எனக்கு விளங்கவைக்க விரும்பிய பொபி, "இங்குள்ள பொது சனங்கள் ஒன்றுமறியா அப்பாவிகள். அவர்களுக்குப் பழக்கமில்லாத ஒருவரைக் கண்டதும், அவரை வேவு பார்க்கும் இலங்கை அரசின் சார்பில் தமிழ் மக்களாகிய எமக்குப் பாதகமாக உளவறிய வந்திருக்கும் ஒருவராக அவர்கள் அனுமானித்துக்கொள்வர். தாம் அறிந்த மெய்யான, உள்ளபடியான, தகவல் அவர்கள் வெளியிடும்பட்சத்தில், அடுத்த கணம் அதன் பலாபலன்கள் என்ன உருவில் நேரக் காத்திருக்கின்றனவோ என்பதை

—5ம் பக்கம் பார்க்க

உ

திருச்சிற்றம்பலம்

திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார்

அருளிச் செய்த

கோளறு பதிகம்

(ஏழாவது பாடல்)

செப்பிள முலைநன் மங்கை ஒருபாகம் ஆக
விடையேறு செல்வன் அடைவார்
ஒப்பிள மதியும் அப்பு முடிமேல் அணிந்தென்
உளமே புகுந்த அதனால்
வெப்பொடு குளிரும் வாத மிகையான பித்தும்
வினையான வந்து நலியா
அப்படி நல்ல நல்ல அவை நல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே.

செப்பின் தன்மையோடு இளமை வாய்ந்த திருமுலைகளையுடைய நன்மை வாய்ந்த உமா தேவியார் ஒரு பக்கத்தில் அமர, இடபத்தை ஊர்ந்தருளுகின்ற செல்வராகிய இறைவர் தம்மை அடைவோர் விரும்ப, தக்க அழகும் இளமையும் வாய்ந்த திங்களையும் கங்கை நீரையும் திருமுடியில் தரித்து அடியேனது உள்ளத்தில் எழுந்தருளிய காரணத்தால் வெப்பமும், குளிர்ச்சியும், வாதமும், அதிகரித்த பித்தமும் மற்றும் தீவினைகளும் திருத்தொண்டர்களுக்கு அதிகமாக வந்து வருத்தாத அவ்விதத்தில் நல்லன நல்லன, அவை நல்லன நல்லன என்றவாறு

இத் திருப்பாட்டால் வெப்பம் குளிர்ச்சி முதலிய நோய்கள் நல்லனவாதல் கூறப்பட்டது,

திருச்சிற்றம்பலம்.

சந்தர்ப்பம் கிடைத்தால் உகண்டா மக்களுக்கு சேவை செய்ய தயார் என இடி அமீன் அறிவிப்பு!

ஒபேட்டே பற்றித் தகவல் எதுவுமில்லை! புதிய ஜனாதிபதியாக தளபதி ஒகெல்லோ?

(கம்பாலா)

மீண்டும் ஒரு சந்தர்ப்பம் கிடைத்தால் தனது நாட்டுக்குப் பணிபுரியத் தாம் தயாராகவிருப்பதாக உகண்டாவின் முன்னாள் ஜனாதிபதி இடி அமீன் அறிவித்துள்ளார். 1979-ம் ஆண்டில் புரட்சிச்சதி மூலம் பதவி கவிழ்க்கப்பட்ட இடி அமீன் கடந்த சில வருடங்களாக சவுதி அரேபியாவில் வசித்து வருகிறார்.

இடி அமீனை நாட்டை விட்டோடச் செய்து, ராணுவப் புரட்சிமூலம் ஆட்சியைக் கைப்பற்றிய மில்டன் ஒபேட்டே நேற்று முன்தினம் திடீரென இடம்பெற்ற ரத்தம் சிந்தாப் புரட்சியொன்றின் மூலம் பதவிகவிழ்க்கப்பட்டார்.

ராணுவத்துக்குள் ஏற்பட்ட பிளவே இப்புரட்சிக்குக் காரணமென கம்பாலா வானொலி அறிவித்தது.

புதியஜனாதிபதியாக ராணுவ பிரிகேடியர் ஒகெல்லோ பதவியேற்கலாமென ஊர்ஜிதம் செய்யப்படாத செய்திகள் தெரிவிக்கின்றன.

புதிய ஆட்சியாளருக்கு தமது ஆதரவை வழங்கவும், சந்தர்ப்பம் கிடைத்தால் உகண்டா மக்களுக்கு சேவைபுரியத் தாம் தயாராகவிருப்பதாகவும் முன்னாள் ஜனாதிபதி இடி அமீன் அறிவித்துள்ளார்.

பதவி கவிழ்க்கப்பட்ட மில்டன் ஒபேட்டே எங்கு இருக்கிறார் என்பது பற்றி இன்னமும் அறிவிக்கப்படவில்லை.

லொங்கோவால் அறிவிப்பு:

பஞ்சாப் தீர்வு இந்தியா முழுவதற்கும் பயன்தரும்

பஞ்சாப் பிரச்சினை பற்றிய ஒப்பந்தம் பஞ்சாபுக்கு மட்டுமன்றி அகில இந்தியாவுக்கும் பயன்தரும் நடவடிக்கை என அகாலிதள் தலைவர் சர்ஹர் ஜஸிங் லொங்கோவால் நேற்று ஜலந்தரில் செய்தியாளரிடம் தெரிவித்தார்.

சீக்கிய தலைவர்களான பிரகாசிங்பாதால், குருச்சரம் சிங் கோரா ஆகியோருடன் தமக்கு கருத்து வேற்றுமையில்லை எனவும் குறிப்பிட்ட அவர், அகாலிதள் ஒரு ஜனநாயகக்கட்சி என்றும், அதில் உள்ளவர்களுக்கு வேறுபட்ட கருத்துகளை சொல்ல உரிமையுண்டு என்றும் சொன்னார்.

இந்த ஒப்பந்தத்தின் சிறப்பு அம்சங்களை மக்களிடையே எடுத்துக் கூறுவது பற்றி அடுத்த செவ்வாய்க்கிழமை நடைபெறும் மாவட்ட குழுக் கூட்டத்தில் முடிவு செய்யப்படும் எனவும் அவர் சொன்னார்.

'அச்சம் அவசியமற்றது'

(சென்னை)

"பாகிஸ்தான் அணுகுண்டு தயாரிக்கிறது என்ற விடயமறிந்து அச்சமுறத் தேவையேயில்லை. பாரதத்தாலும் அணுகுண்டு தயாரிக்க முடியும்." என்று பாரதத்தின் பிரபல விஞ்ஞானிகளில் ஒருவரான டாக்டர் ராமண்ணா தெரிவித்துள்ளார்.

சாகும் வரை தொடருமென அறிவிப்பு

அமெரிக்க அரசின் கொள்கைக்கு எதிராக நிக்கரகுவா அமைச்சர் உண்ணாவிரதம்

(மனகுவா)

நிக்கரகுவா தொடர்பான அமெரிக்க அரசின் கொள்கையைக் கண்டித்து சாகும்வரை தொடர்ச்சியாக உண்ணாவிரதமிருக்கத் தாம் தயாராகவிருப்பதாக நிக்கரகுவா வெளிவிவகார அமைச்சர் மிக்குவல் டி எஸ்க்டோ அறிவித்துள்ளார்.

பத்தொன்பது நாட்களுக்கு முன்னர் உண்ணாவிரதத்தை ஆரம்பித்த அமைச்சர் இதுவரை இருபத்துநான்கு றாத்தல் எடை குறைந்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

நிக்கரகுவா விடயத்தில் அமெரிக்கா "மமதை பிடித்த ராட்சதன்" கொள்கையைக் கடைப்பிடித்து வருவதாகவும் அமைச்சர் குற்றம் சாட்டியுள்ளார்.

"நாங்கள் எதனையும் இழப்பதற்குத் தயாராகவுள்ளோம். எமது உயிரையும் கூட" என்றும் அமைச்சர் உணர்ச்சி வசப்பட்ட நிலையில் தெரிவித்தார்.

ஐம்பத்திரண்டு வயதான அமைச்சர் மிகவும் களைப்படைந்த நிலையில் தமது நிலைமையை விளக்கி வானொலியில் உரையாற்றினார். இறக்கும் வரை தொடர்ந்து உண்ணாவிரதமிருக்கவே தாம் திடசங்கற்பம் பூண்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

ஈழமுரசு வெற்றிடங்கள்

ஓவியர்கள்

எமது பத்திரிகைக்குரிய படங்களை வரைந்து வழங்கக் கூடிய அல்லது பகுதிநேர அடிப்படையில் எமது காரியாலயத்தில் ஓவியராகக் கடமையாற்ற விரும்புவோர் விண்ணப்பிக்கலாம்.

எதிர்பார்க்கும் வேதனம், தகைமைகளைக் குறிப்பிட்டு விண்ணப்பிப்பதோடு விண்ணப்பதாரரால் வரையப்பட்ட ஒரு படமும் விண்ணப்பத்துடன் இணைக்கப்படல் வேண்டும்.

விளம்பரம் சேகரிப்போர்

கமிஷன் அடிப்படையில் முழுநேரமாகவோ, பகுதி நேரமாகவோ விளம்பரம் சேகரிப்போர் தேவை; இரண்டு நற்குணச் சான்றிதழ்களோடு தகைமைகளையும் குறிப்பிட்டு விண்ணப்பிக்கவும்.

விண்ணப்ப முடிவு திகதி: 5-8-85

நிர்வாகி
ஈழமுரசு
37, கண்டி வீதி — யாழ்ப்பாணம்

லயன்ஸ் கழக நிர்வாகிகள்

(சித்தன்கேணி)

வட்டுக்கோட்டை லயன்ஸ் கழகத்தின் நடப்பு வருட உத்தியோகத்தர்களுக்கான தெரிவு கழகத்தலைவர் லயன் டாக்டர் ரி. பகீரதன் தலைமையில் நடைபெற்றது.

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி ஆசிரியர் திரு. டபிள்யூ. என். தேவகடாட்சம் தலைவராகவும் திரு. எஸ். ரி. வைத்திலிங்கம் செயலாளராகவும் திரு. ரி. தேவராசா பொருளாளராகவும் தெரிவு செய்யப்பட்டனர்.

இவ் உத்தியோகத்தர்களுக்கான பதவி ஏற்பு வைபவம் வட்டுக்கோட்டை சங்கரத்தையிலுள்ள திரு. எஸ். ரி. வைத்திலிங்கம் இல்லத்தில் இம்மாதம் 27ம் திகதி நடைபெறவுள்ளது.

வட்டுக்கோட்டை லயன்ஸ் கழக முன்னாள் தலைவர் லயன் டாக்டர் ரி. பகீரதன் தலைமையில் நடைபெறும் இவ்வைபவத்தில் சென்ற நடப்பு ஆண்டு மாவட்ட ஆளுநர் நவா டி குருஸ் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு பதவியேற்பு வைபவத்தை நடத்துவார்.

தட்சரின் அமைச்சரவையில் விரைவில் பெரு மாற்றங்கள்

(லண்டன்)

பிரிட்டிஷ் பிரதமர் திருமதி மார்க்கிரட் தட்சரின் அமைச்சரவையில் விரைவில் பாரிய மாற்றங்கள் ஏற்படக்கூடுமென ராய்ட்டர் செய்திகள் தெரிவிக்கின்றன.

மூன்று மாத விடுமுறைக்குப் பின்னர் அக்டோபர் மாதத்தில் மீண்டும் பாராளுமன்றம் கூடுவதற்கு முன்னர் எதிர்பார்க்கப்படும் மாற்றங்கள் ஏற்படலாமென அரசியல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

கடந்த ஆறு வருடங்களாக தொடர்ச்சியாக ஆட்சி நடத்தி வந்த தட்சர் அரசாங்கத்துக்குள் தற்போது கருத்து வேறுபாடுகள் ஏற்பட்டுள்ளது. இதனால் அண்மையில் நடைபெற்ற சில மாநிலத் தேர்தல்களில் தட்சர் கட்சி படுதோல்வியைச் சந்திக்க நேர்ந்தது.

கடந்த வாரம் பாராளுமன்றத்தில் முக்கிய சம்பள உயர்வு சட்டமொன்றின் வாக்கெடுப்பின் போது ஆளும் கட்சியில் பலர் எதிர்த்து வாக்களித்ததும் குறிப்பிடப்பட வேண்டியதாகும்.

இதனையடுத்து தட்சர் தமது பிரதமர் பதவியை ராஜினாமாச் செய்யப்போவதாக பயமுறுத்தியதாக தெரிவிக்கப்பட்ட போதிலும், அதனை தட்சர் முற்றாக மறுத்துள்ளார்.

இந்த நெருக்கடிகளுக்கு முற்றுப்புள்ளி வைக்கும் வகையில் அமைச்சரவையை மாற்றியமைக்க மார்க்கிரட் தட்சர் எண்ணியுள்ளதாகக் கூறப்படுகின்றது.

'கிருகலக்ஷ்மி'

(சென்னை)

தமிழ் நாட்டில் மாதர் வாழ்வின் மகிமையைக் கருத்திற் கொண்டு 'கிருகலக்ஷ்மி' என்ற புதிய காப்புறுதித் திட்டம் ஒன்று அமைச்சர் திரு ராஜாராமால் நேற்று ஆரம்பித்து வைக்கப்பட்டது.

புதிய ஜனாதிபதி

(லிமா)

பெருவின் புதிய ஜனாதிபதியாக அலன் கார்ஸியா இன்று பதவியேற்கவுள்ளார்.

பூநகரியிலும் பூரண ஹர்த்தால்

1983 ஆடிக் கலவரத்தின் போது வெலிக்கடைச் சிறையில் மரணமானவர்களை நினைவுகூரும் வகையில் கடந்த புதன், வியாழன், வெள்ளி ஆகிய மூன்று தினங்களும் பூநகரிப் பகுதியில் பூரண ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது. வீதிகளில் குட்டிமணி, தங்கத்துரையின் உருவப் படங்கள் தொங்கவிடப்பட்டிருந்தன. குண்டுவெடிச் சத்தங்களும் கேட்டவண்ணம் இருந்தன.

பணம்....

—4-ம் பக்கத் தொடர்

யிட்டு அவர்கள் நிச்சயமாக அறியமாட்டார்கள். எனவே இனம் அறியாத ஒரு பயப்பராந்தி அவர்களை உள்ளூர பீடித்துக் கொள்கிறது. பாவம் அவர்களைக் குறை கூறுவதற்கு இல்லை" எனப் புரிந்துணர்வு மீதூர என்னிடம் கூறினார். வெறும் இரண்டோ மூன்றோ இயக்கங்களுக்குரிய பயிற்சி முகாம்களை நான் சென்று பார்வையிட்டேன். நண்பகலாகும் வேளை யாழ்ப்பாணமாநகருக்கு நாங்கள் வந்துவிட்டோம்.

முதல்நாளிரவுதான் தமிழீழ விடுதலைப் புலிகளின் தாக்குதல் ஒன்றுக்கு யாழ்ப்பாணம் இலக்காகியிருந்தது. 'தம்பி', பிரபாகரனின் 'எல்.ரீ.ரீ.ஈ.' இயக்க விடுதலைப் புலிகள், யாழ்ப்பாணம் பொலிசு நிலையத்தின் மீது "றொக்கட்" எனப்படும் ஏவுகணைத் தாக்குதலொன்றை நடத்தியிருந்தனர். உச்சப் பலம்கொண்ட அரண்வாய்ந்த இப்பொலிஸ் நிலையத்தின் மீதான இத்தாக்குதல் மிக வெற்றிகரமாக நிறைவேறிற்று எனக் கோரப்பெற்றது. நாம யாழ்ப்பாணத்தை வந்தடைந்தவேளை தாக்குதலில் இறந்தோர், காயமுற்றோர் பற்றிய பலவாறியான எண்ணிக்கை விபரங்கள் மக்கள் மத்தியில் பரிமாறப்பட்டுக்கொண்டிருந்தன. நாற்பது பொலிசாருக்கு மேற்பட்டோர் கொல்லப்பட்டனர்; பொலிசு நிலையத்திலிருந்து புலிகளால் கைப்பற்றப்பட்டு எடுத்துச் செல்லப்பட்ட படைக்கலங்களும் ஏராளம், என்றனர் சிலர். வேறு சிலர், புலிகளிலும் பாதிப்புற்றோர், பலியானோர் உளர் என்றது இன்னுமொரு வதந்தி. இலங்கைப் பந்தோபஸ்து அமைச்சர் லலித் அத்துலத்முதலியின் அறிக்கை நான்கு பொலிசாரும் இருபதொரு போராளிகளும் தாக்குதலிற் கொலையுண்டனர் என விபரித்தது.

அதே யாழ். "பொலிஸ் ஸ்ரேஷ"னில் கடமையாற்றும் பொலிஸ்காரர் ஒருவரை நான் சந்தித்தேன். அறிமுகமில்லாத ஒருவருடன் (என்னுடன்) தெருவில் நின்று அவர் செய்தி தர விருப்பமில்லை ஆகவே வசிப்பாளர்களாற் கைவிடப்பட்டிருந்த வீடொன்றினுள் நாங்கள் புகுந்து கொண்டோம். தாக்குதலால் இறந்த நான்கு பொலிசாருள் ஒரு சார்ஜன்ட் உள்ளடங்கலாக மூன்று பேர் சிங்களவர் எனத் தெரிவித்த அவர், தமிழ்ப் போராளிகள் எவரேனும் கொல்லப்படவில்லை எனவும், பெருவாரியான படைக்கலங்கள், வெடிமருந்து ஆகியனவும் தமிழ்ப் போராளிகளால் ஏற்றிச் செல்லப்பட்டன எனவும் வெளியிட்டார்.

எமது "வான்" வண்டிகள் இரண்டும் யாழ்நகரின் நடுவே அமைந்துள்ள மத்திய பஸ் நிலையத்தை அடைந்தன. அதற்கு அடுத்த நாள் தமிழ்ப் புது வருட தினமாக இருந்தபோதிலும் "கடை கண்ணிகள்" எல்லாம் பெரும்பாலும் பூட்டப்பட்டுக் கிடந்தன. மத்திய சந்தை, வீதிகள் தெருக்கள் யாவும் பொதுவாக "வெறிச்சோடிப்போ"யிருந்தனவாயினும், வருவது வரட்டும் என்ற மனப்போக்கில் புத்தாண்டுக்கு வேண்டிய இறுதி நிமிடக் கொள்வனவுகள்தாம் முக்கியம் எனக்கருதி அங்கு நடமாடிய ஒரு சிலரும் அங்காங்கே விரைந்து திரியக் காணப்பட்டனர். உள்ளதைக் கூறுங்கால், இந்தியாவிலுள்ள எந்தவொரு சிறிய பட்டினத்துச் சந்தையையும் போலத்தான் யாழ், மத்திய பொதுச் சந்தையும் இருக்கிறது.

(தொடரும்)

29 - 7 : 85 திங்கட்கிழமை

ஈழமுரசு

வேலணை கூட்டுறவுச் சங்கத் தலைவர் மீண்டும் இயக்க விசாரணையில்!

(வேலணை)

வேலணை பலநோக்க கூட்டுறவுச் சங்க தலைவர் திரு. என். பாலச்சந்திரன் மீண்டும் விடுதலை இயக்கமொன்றினால் விசாரணையின் பொருட்டு அழைத்துச் செல்லப்பட்டுள்ளார். முன்பும் இவர் கடத்திச் செல்லப்பட்டு பின் தப்பி ஓடி தலைமறைவாகியிருந்து மீண்டும் இயக்கத்தினரால் கைது செய்யப்பட்டு விடுதலை செய்யப்பட்டிருந்தார் இவரது விடுதலை பற்றியும், விசாரணையின் பலன் என்னவென்பது பற்றியும், மீண்டும் ஊழல் பற்றி விசாரித்து பொதுமக்களுக்கு தெரிவிக்கும்படியும் பொதுமக்கள் சார்பில் துண்டுப் பிரசுரமொன்றும் சில தினங்களுக்குமுன் வெளியிடப்பட்டிருந்தது: பொதுமக்களின் வேண்டுகோளை செவிசாய்த்த விடுதலை இயக்கத்தினர் மீண்டும் நேற்று திரு. பாலச்சந்திரனை கைதுசெய்து அழைத்துச்சென்றுள்ளனர்.

சனிக்கிழமை நடந்த சம்பவம்:

கொழும்பு மெயில் ரயில் வழிமறிக்கப்பட்டு

சிங்களம், தமிழில் ஈழ சுலோகம் எழுதப்பட்டது

(மிருசுவில் நிருபர் கிறிஸ்ரி ரஞ்சன்)

நேற்று முன்தினம் சனிக்கிழமை இரவு காங்கேசன்துறையிலிருந்து கொழும்பு கோட்டைக்குச் சென்ற தபால் புகையிரதம் கொடிகாமத்தில் ஆயுதம் தாங்கிய சுமார் முப்பத்தி ஐந்து இளைஞர்களால் மறிக்கப்பட்டு அப்புகையிரதத்தில் தமிழ் ஈழ சார்பு வாசகங்கள் எழுதப்பட்டு இரு மணிநேர தாமதத்தின்பின் பயணத்தைத் தொடர அனுமதி அளிக்கப்பட்டது.

இரவு 7-45 மணியளவில் புகையிரதம் கொடிகாமம் புகையிரத நிலையத்தை அடைந்ததும் அங்கு திடீரென இரு வாகனங்களில் வந்திறங்கியவர்களாகக் கூறப்படும் சுமார் முப்பத்தி ஐந்து ஆயுதம் தாங்கிய இளைஞர்கள் புகையிரதம் நகராதவாறு அதனை சுற்றி வளைத்தனர்; இவர்களுள் சிலர் எஞ்சின் அறைக்குள் ஏறி எஞ்சினை நிறுத்தும்படி பணித்தனர். அடுத்து சாரதி எஞ்சினை நிறுத்தினர். அப்போது பயணிகள் பெட்டியின் மின்குமிழ்களும் அணைந்தன. இச்சமயம் வெள்ளை நிற பெயின்றினால் பயணிகள் பெட்டி அனைத்தின் இரு பக்கங்களிலும் இடைவெளியின்றி தமிழீழத்தை வலியுறுத்தும் சுலோகங்கள் பெரிய அளவில் எழுதப்பட்டன; மொசாட், சி ஐ ஏ. பாதுகாப்புப் படைகள். ஆகியவற்றுக்கு எதிரான, சுலோகங்கள் பலவும் எழுதப்பட்டன.

சுலோகங்களில் அனேகமானவை சிங்களத்திலும் சில ஆங்கிலம், தமிழ், ஆகிய மொழிகளிலும் எழுதப்பட்டன. சுலோகங்களின் அடியில் ''ரெலோ ஆமி'' என எழுதப்பட்டிருந்தது.

இரவு9 45 மணியளவில் பயணத்தைத் தொடர்வதற்குரிய அனுமதி இளைஞர்களால் பிரதம காரட்டுக்கு அளிக்கப்பட்டதை அடுத்து புகையிரதம் புறப்பட்டது.

சம்பவம் நடைபெற்ற நேரம் புகையிரதத்தில் கடமை புரிந்த இரு பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் உட்பட அனைத்து சிங்கள ஊழியர்களுக்கும் ஆயுதம் தாங்கிய இளைஞர்களால் பாதுகாப்பு அளிக்கப்பட்டது.

வைத்தீஸ்வரா அதிபர் பேச்சு:

கல்வியில் நாம் கூடிய கவனம் செலுத்த வேண்டியது அவசியம்

''புதிய கல்வித் திட்டங்கள் பற்றி பெற்றோர்கள் அறிந்திருப்பது நல்லது; இது தமது பிள்ளைகளின் கல்வி வளர்ச்சிக்கும் அவர்களுக்கும் நன்கு உதவுவதாக இருக்கும். அது மட்டுமன்றி பாடசாலைகளில் கல்வி சிறப்பான முறையில் நடைபெறுகின்றதா என்பதனையும் அறிந்துகொள்ள வாய்ப்பளிப்பதாக இருக்கும்.''

இவ்வாறு யாழ். வைத்தீஸ்வர வித்தியாலய அதிபர் திரு. எஸ். சிவசரவணபவன் நேற்று நடைபெற்ற பாடசாலை அபிவிருத்திச் சங்க வருடாந்தப் பொதுக் கூட்டத்துக்குத் தலைமை தாங்கி உரை நிகழ்த்துகையில் எடுத்துக் கூறினார்.

பெற்றோர், பழைய மாணவர், ஆசிரியர்கள் ஆகியோர் கலந்துகொண்ட இக்கூட்டத்தில் திரு. சிவசரவணபவன் மேலும் பேசுகையில், கல்வி வளர்ச்சிக்கு பெற்றோர் பழைய மாணவர், நலன் விரும்பிகள் ஆகியோரது உறுதியான ஒத்துழைப்பு அவசியமென்றும் எந்தச் சூழ்நிலையிலும் கல்வி தொடர்ந்து கொண்டே இருக்க வேண்டுமென்றும் கூறினார்.

புகழ்பெற்ற கல்வி நிலையமான வண்ணை வைத்தீஸ்வர வித்தியாலயம் மீண்டும் நல்ல வளர்ச்சியடைய எல்லோரது ஒத்துழைப்பும் அவசியம் எனவும் அவர் வேண்டுகோள் விடுத்தார்.

கல்வியில் நாம் இன்னமும் கூடிய கவனம் செலுத்த வேண்டிய காலம், அவசியம் இப்போது ஏற்பட்டுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார்.

ஆசிரியர்கள், பெற்றோரின் பிரதிநிதிகள், பழைய மாணவர்களின் பிரதிநிதிகள் ஆகியோரும் பேசினர்.

புதிய காரியதரிசி திரு. எஸ். ஜெகதீசன் நன்றி கூறினார்.

சடலத்தில்

நாற்பது கத்திக் குத்துக் காயம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மூன்றும் வாய்க்காலைச் சேர்ந்த இளம் குடும்பஸ்தர் ஒருவர் இனம் தெரியாதவர்களால் கொலை செய்யப்பட்டு மரணமானார்.

ராதா என்று அழைக்கப்படும் வி. இராதாகிருஷ்ணன் (வயது 35) ஆகிய இவர் சில வாரங்களுக்கு முன்னர் பாதுகாப்பு படையினரால் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு விடுதலையானவர் என்பது குறிப்பிடத்தக்கது கடந்த 25ம் திகதி இரவு இனம் தெரியாத சிலர் இவரின் வீட்டுக்குச் சென்று விசாரணை செய்வதற்காக வரும்படி கூறி இவரை அழைத்துச் சென்றதாகவும் இவர் திரும்பி வராததால் இவரின் உறவினர்கள் இவரைத் தேடிச் சென்றபோது கத்திக் குத்துக் காயங்களுடன் இறந்து கிடந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது. சுமார் நாற்பது கத்திக்குத்துக் காயங்கள் இவரின் உடலில் காணப்பட்டது.

இவரின் உடல் கிளிநொச்சி அரசினர் வைத்தியசாலை பிரேத அறையில் பரிசோதனைக்காக வைக்கப்பட்டு பின்னர் 26ம் திகதி உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது.

இனப்....

...1-ஆம் பக்கத் தொடர்

புத்தான் சரியான தீர்வு என்று தமிழ்நாடு மாக்ஸிஸ கட்சிப் பிரமுகர் திரு நல்லசிவம் கருத்துத் தெரிவித்தார்.

பூட்டான் மாநாட்டின் அடுத்த கட்டப் பேச்சுவார்த்தையின் போது இலங்கை அரசு இதற்கேற்ற வகையில் தனது நடைமுறைகளை மேற்கொள்ள வேண்டுமென்றும் அவர் தெரிவித்தார்.

எச்சரித்தும்....

... 1ஆம் பக்கத் தொடர்

நடாத்தப்பட்டது. ஹர்த்தாலுக்கு முதல்நாள் படையினர் கடைகளை திறக்கவேண்டும் என வர்த்தகர்களை எச்சரித்த போதிலும், கிளிநொச்சி நகரில் மட்டுமல்லாது கிராமங்களுக்குள் இருக்கும் சிறு சிறு கடைகளும் மூடப்பட்டு பூரணமாக ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது. அதேவேளை நீண்ட இடைவெளிக்குப் பிறகு கிளிநொச்சியில் தொடர்ச்சியாக குண்டு சத்தம் கேட்ட வண்ணம் இருந்தது.

கொழும்பில் ஆடிவேல்விழா இன்று ஆரம்பமாகிறது

(கொழும்பு)

வருடாந்தம் கொழும்பில் இடம்பெற்றுவரும் ஆடிவேல் விழா இன்று ஆரம்பமாகிறது. இவ் விழா சம்பந்தமான சமயச் சொற்பொழிவுகள், நாதஸ்வரக் கச்சேரிகள், இசை நிகழ்ச்சிகள், வில்லுப்பாட்டு உட்பட பல கலை நிகழ்ச்சிகளும் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன.

கொழும்பு ஸ்ரீ ஜெயந்தி நகர் ஜிந்துப்பிட்டி ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி கோவில் ஆடி முருகவேள் சிறப்புவிழா நிகழ்ச்சிகள் 30ம் 31ம், 1ஆம் திகதிகளில் நடைபெறும்.

நாளை செவ்வாய் மாலை7 00 மணிக்கு ஆடிவேல் விழாவை முன்னிட்டு தென் இந்தியாவிலிருந்து அழைக்கப்பட்ட திருமதி இளம்பிறை மணிமாறனின் ''வினாயகர் மகிமை'' பற்றிய சிறப்புச் சொற்பொழிவும், 8 00 மணிக்கு ஈழநல்லூர் ஸ்ரீ தேவி வில்லிசைக் குழுவினரின் 'வள்ளி திருமணம்' வில்லிசையும் இடம் பெறும்.

நூலகர் இல்லை; நூலகத்துக்கு மூடுவிழா

(நயினாதீவு)

யாழ். மாவட்ட அபிவிருத்திச் சபையின் நயினாதீவு உப அலுவலக நிருவாகத்தின் கீழ் இயங்கும் நூல் நிலையத்தில் நூலகர் இல்லாமையால் தற்போது மூடப்பட்டுள்ளது. இங்கு கடமையாற்றிய நூலகர் இப் பதவியினின்றும் விலகிப் பல மாதங்களாகியும் இதுவரையும் இவ் வெற்றிடம் நிரப்பப்படாதிருப்பதே இதற்குக் காரணம் என்பது குறிப்பிடத்தக்கது.

வடக்கும்....

...1 ஆம் பக்கத் தொடர்

மென்றும் திரு. கணேசலிங்கம் சுட்டிக் காட்டினார்.

தனித்தனியான மாகாண சபை யோசனை சர்வகட்சி மாநாட்டினால் நிராகரிக்கப்பட்ட ஒன்றாக இருப்பதால், அதனை மீண்டும் பூட்டான் மாநாட்டில் ஆராயவேண்டிய தேவை எவருக்குமே எழாது என்றும், அதனை எவருமே ஏற்கப்போவதில்லை என்றும் அவர் சொன்னார்.

பாராளுமன்றம்....

...1 ஆம் பக்கத் தொடர்

என பிரிகேடியர் ஒகெல்லோ கூறியுள்ளபோதிலும், தலைநகரான கம்பாலாவில் இராணுவத்தினர் கடைகளை உடைத்து கொள்ளையடிப்பதில் ஈடுபட்டதாகப் பல செய்திகள் தெரிவிக்கின்றன.

இரவு முழுவதும் கம்பாலா நகரில் துப்பாக்கிச் சூட்டுச் சத்தங்கள் கேட்ட போதிலும் இதுபற்றி சரியான தகவல் கிடைக்கவில்லை.

5 குழுக்கள்....

...1 ஆம் பக்கத் தொடர்

தீர்வு காண்பதையே தமிழர்கள் விரும்புவதாகவும், ராணுவத் தீர்வையல்ல என்றும் அமிர்தலிங்கம் மேலும் சொன்னார்.

தமிழர் விடுதலைக் கூட்டணி தனி நாட்டுக் கோரிக்கையை இன்னமும் கைவிடவில்லை எனவும் சுட்டிக் காட்டிய அவர் இலங்கை அரசு திருப்திகரமான யோசனை எதனையும் இன்னமும் தெரிவிக்கவில்லை எனவும் சொன்னார்.

இவ்விடயத்தில் பாரதமத்திய அரசு எடுத்து வரும் நடவடிக்கைகளுக்கும் அவர் நன்றி தெரிவித்தார்.

சமாதான சபை 'சபாஷ்' பெற்றது

(சுண்டிக்குளி)

நாவற்குழி சமாதான சபைக்குப் பொது மக்களின் 'சபாஷ்' கிடைத்துள்ளது. இச் சமாதான சபை நாவற்குழிப் பகுதியில் பல வருட காலமாகத் தீர்க்க முடியாதிருந்த காணி, கொடுக்கல் வாங்கல் மற்றும் பல்வேறு பிணக்குகளையும் குறுகிய காலத்தில் சமாதானமாகத் தீர்த்து வைத்து இப் பகுதியில் சாதனை புரிந்துள்ளது.

திரு. பொ. சுப்பையா ஜே. பியைத் தலைவராகக் கொண்ட இச்சமாதான சபையின் உப தலைவராகத் திரு. வி. எஸ் கந்தசாமியும், காரியதரிசியாகத் திரு. எஸ் சிவராசா ஐ.பி.யும், உப காரியதரிசியாகத் திரு. எஸ். நாகராஜாவும், திருவாளர்கள் சிவமணி அம்பலவாணர், த. பவனேசன், க. தம்பிராசா, வ. ஜெயராசா, செ. தம்பிராசா. மு. கந்தப்பிள்ளை, வே. ஐயாத்துரை, சுப்பிரமணியம், எஸ். கே. தம்பிராசா, மா. கிருஷ்ணன், எஸ். ஆர். பொன்னம்பலம் ஆகியோர் குழு உறுப்பினர்களாகவும் சேவையாற்றி வருகின்றனர்.

பாட நூல்கள் வந்து சேர்ந்தன

(புங்குடுதீவு)

புங்குடுதீவு, வேலணை கல்வி வட்டாரங்களைச் சேர்ந்த பாடசாலை மாணவர்களுக்கு வழங்குவதற்கான புதிய பாட நூல்கள் தற்போது கொழும்பிலிருந்து வந்து சேர்ந்துள்ளன.

இரண்டாம் தவணை இறுதிக்குள் இப்பாட நூல்கள் மாணவர்களுக்கு வழங்கப்படவுள்ளன. வேலணை வட்டாரக் கல்வியதிகாரி திரு. பொன். கணேசன் இதுபற்றிப் பாடசாலை அதிபர்களுக்கு அறிவித்துள்ளார்.

கடந்த ஆறு மாதங்களாகத் தீவுப்பகுதிப் பாடசாலை மாணவர்கள் புதிய பாட நூல்களின் வருகையை எதிர்பார்த்திருந்தனர்.

நல்ல சந்தர்ப்பம்!

இரண்டு கிழமைக்குள் அவுஸ்திரேலியா!

முழுப்பயணத்துக்கும் உத்தரவாதமளிக்கப்பட்டு
எங்கள் பிரதிநிதியுடன் விசாவோடு செல்லலாம்.

குறிப்பிட்ட திகதிகளில்
மாற்றமில்லாத பயணம் ஏமாற்றத்தைத்
தவிர்க்க எதிர்வரும் சனிக்கிழமைக்கு
முன்பாக வரவும்.

K. சிவா

30, கே. கே. எஸ். வீதி, சுன்னாகம்;
தொலைபேசி: 304

'ஈழமுரசு' சாயிபாபா அட்வர்டைஸிங் அசோஸியேற்ஸ் ஸ்தாபனத்தாரால் 37, கண்டி வீதி, யாழ்ப்பாணத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 29-07-85 திங்கட்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது. தொலைபேசி: 23336